# திருவிளையாடல் புராணத்தில் நாரைக்கு முக்தி கொடுத்த படலத்தின் வழி வெளிப்படும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைச்சிறப்பு

அம்சவேணி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோவை.

## முன்னுரை

தமிழ் மொழியின் மீது தீராக் காதல் கொண்ட தமிழர்கள் பலர் மொழியின் வளர்ச்சிக்கு ஆழ்ந்து, அகன்று, நுணுகி அயராது உழைத்தனர். அவ்வகையில் தமிழ்றிஞர்கள் தம்முடைய உடல், பொருள், ஆவி என அனைத்தையும் அர்பணித்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்கள். அவர்களில் வேங்கடசாமி நாட்டார் அவர்களின் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கதாகும். மதுரைப் பதியிலே கோயில் கொண்டிருக்கும் முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரக் கடவுள் உலக உயிர்கள் உய்தி பெரும் பொருட்டு பெருங்கருணையினால் நிகழ்த்தியருளிய அறுபத்து மூன்று திருவிளையாடல்களைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணம் என்னும் பெயரில் இயற்றியுள்ளார். இந்நூலுக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டார் சிறப்பான உரை எழுதியுள்ளார். திருவிளையாடல் புராணத்தில் தடாதகைப் பிராட்டியாரின் திருவவதாரப்படலத்தின் வழி ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைச் சிறப்பை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

ந.மு.வேங்கடசாமி நாட்டார் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாற்றுக்கு அடுத்துள்ள நடுக்காவேரியில் பிறந்தவர். அவ்வூரில் வாழ்ந்த முத்துச்சாமி நாட்டார்க்கும், தைலம்மாளுக்கும் 12.04.1884இல் மகனாகத் தோன்றினார். முத்துச்சாமி நாட்டார் அவர்கள் மரபு வழித் தமிழ்ப்புலமை எய்தியவர். இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். ந.மு.வேங்கடசாமி நாட்டார் இளமையில் தம் தந்தையாரிடம் மூதுரை, நல்வழி போன்றவற்றைப் பாடங்கேட்டுள்ளார். நாட்டாருடைய சிறிய தந்தையார் சொக்கலிங்க நாட்டார் இசைத்துறையில் புலமை வாய்ந்தவர். நாட்டார் இவரிடத்தில் இசைப்பயிற்சி பெற்றுள்ளார். இவரிடத்தில் பெற்ற இசைப்பயிற்சி பிற்காலத்தில் சிலப்பதிகாரத்தீற்கு உரையெழுதியபோது அரங்கேற்று காதையிலுள்ள இசை நுணுக்கங்களைத் தெளிந்து எழுதுவதற்குத் துணை புரிந்துள்ளது. இச்செய்தியினைச் சிலப்பதிகார உரை நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையில் அறிந்து கொள்ள முடிகிறது.

**நாட்டார் அவர்களின் பள்ளிப்பருவம்**

பள்ளிப்படிப்பை முடிந்ததும், தம் தந்தையாரிடத்தில் கோவை, அந்தாதி போன்ற சிற்றிலக்கியங்களையும் நைடதம், வில்லிபாரதம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களையும் பாடம் கேட்டுள்ளார். இப்பயிற்சியால் மதுரை தமிழ்ச்சங்கம் நடத்திய தேர்வுகளில் 1906இல் நடந்த பால பண்டிதத்திலும், 1907இல் நடந்த பண்டிதத் தேர்விலும் முதல் மாணவராகத் தேறித் "பித்தோடா" எனும் பரிசைப் பெற்றுள்ளார். உழைப்பினால் தம் புலமையையைப் பெருக்கிக்கொண்ட இவர், இலக்கணத்தில் பெரும் புலமை வாய்ந்தவராக விளங்கினார். மகாகவி பாரதியார், தொல்காப்பியத்தில் தனக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தெளிவதற்கு நாட்டாரை அணுகித் தெளிவு பெற்றுள்ளார். அவர் நாட்டாரைக் காட்டிலும் இரண்டு ஆண்டுகள் மூத்தவர் என்பதைக் குறிப்புகளின் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது.

**ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் தமிழ்ப்பணி**

நாட்டார் வாழ்ந்த அக்காலகட்டத்திலேயே இலங்கை விவேகானந்தர் சங்கம், திருப்பதி கீழ்க்கலை மாநாடு, சென்னை கலித்தொகை மாநாடு, தூத்துக்குடி சைவசித்தாந்த மகாசபை, மேலைச்சிவபுரி - சன்மார்க்க சபை. ஞானியாரடிகள் மடம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், சென்னை - சைவ சித்தாந்த மகாசபை ஆகியவற்றில் தமிழ் மொழியின் பெருமைகளைப் பேருரையாற்றியுள்ளார். அவை அனைத்தும் புலமை நலம் சான்றவை. இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற சிறு நூல்களுக்கும், இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற கீழ்க்கணக்கு நூல்களுக்கும், திருவிளையாடற்புராணம், மணிமேகலையில் சில காதைகள், சிலப்பதிகாரம் ஆகியனவற்றுக்கு எழுதியுள்ள உரைகள் சிறப்பு வாய்ந்தன. இவர் நக்கீரர், கபிலர், வேளிர் வரலாறு, சோழர் சரித்திரம், கள்ளர் சரித்திரம், கண்ணன் வரலாறு கற்பு மாண்பும் போன்ற ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

நாட்டார் அவர்களின் உரைநடை எளிமையும் நுண்மையும் வாய்ந்தது. பழந்தமிழ்ச் சொற்கள் மிக்க இனிமை பயப்பது. சுருக்கமும் செறிவும் கொண்டவை. படிக்கப் படிக்க இன்பம் பயப்பது. இவர் செந்தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி ஆகும் இதழ்களில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் பின்னாளில் கட்டுரைத் திரட்டு என்னும் பெயரில் இரு தொகுதிகளாக வெளிவந்து இவரது அயராது உழைத்த தமிழ்ப்பணிக்குப் பெருமை சேர்த்தது. நாட்டாரின் பெருமை மற்றும் புலமையைப் பற்றித் தமிழ்த் தென்றல் திரு.வி.க தம் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**திருவிளையாடற் புராணம்**

இறைவன் அருளாலே நந்தி தேவரிடத்திலே கேட்டுத் தெரிந்த சனற்குமார முனிவர், வேத வியாச முனிவருக்குச் சொல்ல, அதை வேத வியாச முனிவர் சூதக முனிவருக்குச் சொன்ன பதினெண் புராணங்களிலே ஒன்றாகிய கந்தபுராணத்தில் சங்கர சங்கிதையில் சொல்லப்பட்டதான "திருவாலவாய் மகிமை" என்கிற வடநூலைத் தமிழில் நமக்குத் தந்தவர் பரஞ்சோதி முனிவர் என்று நூல்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. சங்க காலத்தில் தமிழ் மொழியை வளர்க்க முச்சங்கங்களை வைத்துத் தமிழை வளர்த்த இடம் மதுரையாகும். அம்மதுரையிலே அருளாட்சி செய்துவரும் சொக்கநாதப் பெருமான் திருவளால் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் நிகழ்ந்தவையாகும். ஆதியும் அந்தமும் இல்லா இறைவனாகிய சிவபெருமானது திருவிளையாடல்கள் அனைத்தும் மதுரை மாநகருக்கே உரியவையாகும். இறைவனது திருவிளையாடல் நடைபெற்றதனாலேயே அந்நகருக்கே உரிய பெருமை என்றும் சிறப்புடையதே. பாண்டிய நாட்டின் தெற்குப் பகுதியிலே மாடங்கள், கோபுரங்கள் நிறைந்த ஊர் ஒன்று இருந்தது. அங்கே அழகான தாமரைக் குளம் ஒன்று இருந்தது. அக்குளத்தில் வாழும் மீன்களைக் கொத்தியுண்டு ஒரு நாரை வாழ்ந்து வந்தது. சில நாட்கள் மழை பெய்யாததால் அந்த அழகான தாமரைக் குளத்திலே நீர் வற்றிப் போயிற்று. அதனால் தனக்கு இரை கிடைக்க வழியில்லாமல் போனதால், நாரை ஒரு காட்டுக்குச் சென்று சோர்ந்து விழுந்தது. அந்த காட்டிலே ஜீவன் முக்தர்களான ரிஷிகள் பலர் வசித்து வந்தார்கள். அம்முனிவர் கூட்டத்திலே சிவனாந்தமயமாகிய சத்தியன் என்ற தவசிரேஷ்டர் இருந்தார்.

**தாமரை தடாகத்தின் அழகு**

அந்த கானகத்தில் சதுரமாக அமைந்து படித்துறைகள் அமைக்கப்பட்ட தாடகம் ஒன்று இருந்தது. அதன் கரையிலே சந்தியா மடம் இருந்தது. அந்தத் தடாகம் அதோ தீர்த்தம் என்று சொல்லப்பட்டது. அந்தக் குளத்தைச் சுற்றிலும் நறுமணம் வீசும் இனமலர்கள் பூக்கும் பாதிரி, வேங்கை, வஞ்சி, குரா, மரா, முருக்கு, மருது முதலிய மரங்கள் வளர்ந்திருந்தன. இத்தகைய மணம்மிக்க மலர்களைக்கொண்ட மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் அந்தத் தாமரை தாடகம் தனி அழகினைப் பெற்றது. இந்நிலையில் அந்தக்காடு தடாகம், தாமரை மணம் வீசும் மரங்கள் ஆகியவற்றால் அந்தக்காடே சிறந்த அழகினைப் பெற்று சிறந்து விளங்கியது.

ரிஷிகள் அந்தத் தடாகத்தில் நீராடும் பொழுது மூழ்கி எழுந்தனர். அப்போது அவர்களது புறத்திலே சாய்ந்து கிடந்த சடைக் கற்றையிலே மீன்கள் பாய்ந்து புரண்டன. நாரை அம்மீன்களைப் பார்த்து கொத்தித் தின்னலாம் என்று எண்ணியது. ஆனால், இந்தத் தவமுனிவோரின் உடம்பைத் தீண்டுவதற்கு இந்த மீன்கள் என்ன தவம் செய்தனவோ நான் இவற்றைத் தின்னக்கூடாது என்று எண்ணி இரையை வெறுத்திருந்தது. மீனையே உணவாக உண்ணக் கூடிய நாரை, உணவை வெறுத்திருந்தது என்பதை ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் அழகுபட உரைத்துள்ளார்கள்

"ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட எத்தவஞ் செய்தன வேகொலென்று
ஆண்டை மீனக் காகா எனஇரை
வேண்டு நாரை வெறுத்தங் கிருந்தால்"

**மதுரையின் பெருமையை நாரை கேட்டல்**

சந்தியா மடத்திலே தங்கியுள்ள முனிவர்கள் ஓடையில் நீராடிக் கரையேறி தங்களது அனுதின வேலைகளை முடித்துவிட்டுச் சந்தியா மடத்திலே அமர்ந்து சோமசுந்தரப் பெருமானின் மதுரைப் புராணத்தை ஓதி வந்தனர். அப்போது சொக்கலிங்க மூர்த்தியின் சிறப்பையும், மதுரையின் பெருமையையும், பொற்றாமரைக் குளத் தீர்த்தத்தின் மகிமையையும், பெருமானின் திருவிளையாடல்களையும், அம்மூர்த்தி, ஸ்தல தீர்த்தங்களை அடைந்தவருக்குச் சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளி வந்து அருள்புரிவர் என்னும் பாங்கினையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தனர் அதனை நாரையானது நயமுடனே கேட்டுக் கொண்டிருந்தது. இதனை

"அண்ணலெம் பெருமான் செய்த அருள்வினை யாட்டு மாதிப்
பண்ணவன் சிறப்பும் கூடற் பழம்பதிச் சிறப்புந் தீர்த்தத்து
எண்ணருஞ் சிறப்புஞ் சேர்ந்தோர்க் கெளிவரும் இறைவனென்னும்
வண்ணமு மெடுத்துக் கூறக் கேட்டங்கு வதியு நாரை:

என்று இறைவனது பெருமையைக் கேட்ட நாரையை ஆசிரியர் சிறப்புப்படக் கூறியுள்ளார்கள்.

**நாரைக்கு மெய்யுணர்வு தோன்றல்**

இறைவனது பெருமைகளைக் கேட்டறிந்த நாரைக்கு இறைவன் மீது ஆழ்ந்த பக்தி ஏற்பட்டது. உடனே நாரைக்கு அறியாமை நீங்கியது வினைத்தொடர்பு அறுந்தது. மெய்யுணர்வு தோன்றியது. சிவபக்தி இழுத்துச் செல்லப் பறவை மதுரையம்பதி சேர்ந்தது. பொற்றாமரைக் குளத்திலே நீராடியது. சோமசுந்தரப் பெருமானை வணங்கி விமானப் பிரதட்சிணம் செய்தது. இறைவன் தனது அருள் திருக்கண்ணால் நோக்கினார். நாரையும் கருணாமூர்த்தியின் திவ்ய ரூபத்தைத் தியானம் செய்தது.

"மடம்படும் அறிவு நீங்கி வல்வினைப் பாசம் வீசித்

திடப்படும் அறிவு கூர்ந்து சிவபரஞ்சோதி பாதத்
திடப்படும் அன்பு வாவென் றீர்த்தெழ வெழுந்து நாரை
தடம்படு மாடக் கூடல் தனிநக ரடைந்து மாதோ"

பறவையும்கூட இறைவன் மீது கொண்ட பக்தியினைச் சுவைபட கூறியுள்ள உரைச்சிறப்பை உணர்ந்துகொள்ள முடிகிறது.

நாரை தொடர்ந்து பதினைந்து நாட்கள் முறை தவறாமல் வழிபாடு செய்து வந்தது. பதினாறாவது நாள் பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடச் சென்ற போது அதிலே துள்ளிய மீன்களை இரை கொள்ள நினைத்தது, உடனே பெருமான் அருளால் அறிவு பெற்றது.

உடனே நாரை அந்தோ இத்திருக்குளத்தில் வாழும் மீன்களைத் தின்னும் எண்ணம் எனக்கு உண்டாயிற்றே என்ன பரிதாபம் இப்படியிருந்தால் என்னுடைய பிறவித் துன்பம் எப்பொழுது ஒழியும்?" என்று கருதி மிகவும் வருந்தியதாக ஆசிரியர் உரைத்துள்ளதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. மீன்களை உண்ணக் கூடாது என்பதை உணர்ந்த நாரை இறைவனை நினைத்து வழிபாடு செய்துகொண்டு அப்பதியிலே தங்கிவிட்டது.

**நாரையின் முன்பு இறைவன் தோன்றுதலில் ஆசிரியர் கூறியுள்ள உரைச்சிறப்பு**

நாரை இறைவன் மீது ஆழ்ந்த பக்தியைக் கொண்டு விளங்கியது. அதன் காரணமாகக் கடுமையான விரதத்தினை மேற்கொண்டது. அதற்கு மனம் மகிழ்ந்த சோமசுந்தரப்பெருமான் நாரை எவ்வாறு தன்னை அதன் மனதில் தியானித்ததோ, அதே உருவத்தில் அதன் முன்பு தோன்றினார். பிறகு நாரையிடம், எனது அன்புக்குகந்த பறவையே வேண்டும் வரம் யாது? சொல்வாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இந்நிலையை அறியும்போது இறைவன் மனிதனுக்கு மட்டும் அல்லாது பறவைகளுக்கும் அருள் புரியும் அன்பு மனம் கொண்டவர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இச்செய்தியினை ஆசிரியர் தனது உரையில்

"சுந்தரச் செம்மல் பாதத் துணைமலர் அன்பில் தோய்ந்து
சிந்தைவைத் திருக்கும் எல்லை தேவரு மறையஞ் செய்யும்
வந்தனைக்கு அரியா னாரை மனநினை வடிவாய்த் தோன்றி
எந்தமக் கினியாய் வேண்டும் வரமென்கொ லியம்பு கென்றான்."

என்று கூறியுள்ளதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும் இறைவன் தேவரும் மறையும் செய்யும் போற்றுதலுக்கு அரியவனாகவும், இந்நாரைக்கு எளியவனாகவும் இருப்பதை ஆசிரியரின் உரைத்திறத்தின் மூலமாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

**நாரையின் மற்றொரு விண்ணப்பம்**

செங்கால் நாரையும் பெருமான் திருமுன்பு விழுந்து வணங்கி, "அண்ணலே இந்தப் பிறவியைப் போக்கி அடியேனையும் சிவலோகத்தில் சேர்த்துக் கொண்டருள வேண்டும் மற்றொரு விண்ணப்பம் எனது இனத்தைச் சேர்ந்த பறவைகளும் வேறு பறவைகளும் இந்தத்

தீர்த்தத்திலே மீன்களை இரையெடுத்தால் அவற்றுக்குப் பெரும் பாவம் வந்து சேரும். ஆதலால், இத்திருக்குளத்தின் நீரில் எப்போதும் மீன்கள் இல்லாதபடி அருளல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டது. சொக்கநாதப் பெருமானும் அவ்வாறே வரம் அருளி மறைந்தருளினார்.

இதனை ஆசிரியர்

"என்று மித்தட மீனில வாகநீ
நன்று சால்வர நல்குன வெள்ளிமா
மன்று ளானும் வரந்தந்து போயினான்
சென்று நாரை சிவலோகஞ் சேர்ந்தது ஆல்"

என்று இறைவன் வரம் அருளி சென்றதை விளக்கியுள்ளார்.

**நாரையின் பெரும் பேறு**

நாரையும் நான்கு புறங்களும் மூன்று கண்களும் கொண்ட சீவரூபம் பெற்று, தேவர்கள் மலர் மாரி பொழிய விமானத்தில் ஏறியது. தேவ துந்துபிகள் முழக்கம் செய்து ஆர்ப்பரிக்க சிவலோகத்தை அடைந்து, நந்தி கணங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. நாரையின் முக்திநிலையை உணரும்போது பறவையின் அன்பு எளியதோ? சிவபெருமானின் அருள் எளியதோ? என்று உணர்கின்ற போது ஈசனது அன்பும் அருளும் அன்பர்க்கே எளியது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

ஆதியும் அந்தமும் இல்லானாகிய சிவபெருமான் தன்னை வணங்குபவர்களைக் காட்டிலும், தன் அடியார்களை வணங்குபவர்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. அவர்கள் மீதே அதிகப்படியான அருளினைச் சொரிவதாகச் சான்றோர்கள் கூறியுள்ளார்கள். அவ்வகையில் இறைவன் உயர்திணைகளுக்கு மட்டுமல்லாமல் அஃறினை உயிர்களுக்கும் அருளினைச் சொரிவதில் ஈடு இணை இல்லாதவனாக விளங்குகின்றான். அத்தகைய இறைவன், இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள "நாரைக்கு முக்தி கொடுத்த படலம்" என்ற தலைப்பின் மூலமாக இறைவன் உலக உயிர்கள் அனைத்தையும் பாரபட்சமின்றி தாயுள்ளம் கொண்டு அனைத்து உயிர்களையும் மோட்சம் பெறச் செய்கின்றான் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது

**பார்வை நூல்கள்**


- பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணம் - கூடற்காண்டம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ- ஆ)
- தி.நமச்சிவாயம் (ப- ஆ) திருவிளையாடற்புராணம்